**செ.வெ.எண்: 47** **நாள்:17.08.2016**

**பத்திரிகைச்செய்தி**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 2016-2017-ஆம் ஆண்டுக்கான ஆகஸ்ட் மாத மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் 24.08.2016 அன்று புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத் திடலில் தடகளம், கால்பந்து வளைகோல்பந்து மற்றும் நீச்சல் விளையாட்டுகளில் கீழ்க்காணும் நிகழ்வுகளில் சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

தடகளம் : 100மீ, 400மீ, 1500மீ நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் (சிறுவர் மற்றும் சிறுமியர்) குண்டு எறிதல் மற்றும் தட்டு எறிதல்

குழு விளையாட்டு : 1. கால்பந்து (சிறுவர் மற்றும் சிறுமியர்கள்), 2. வளைகோல்பந்து (சிறுவர் மற்றும் சிறுமியர்கள்).

நீச்சல் (சிறுவர் மற்றும் சிறுமியர்): Free Style: 50மீ, 100மீ, 200மீ, 400மீ, Back Stroke: 50மீ, Breast Stroke : 50மீ, Butterfly:50மீ மற்றும் IM 200மீ.

போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதிகள்: பள்ளிகளில் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் மாதாந்திர விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுப் போட்டிகளில் ஒருவர் ஒரு விளையாட்டு நிகழ்வில் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

ஆகஸ்ட் 2016-ஆம் மாத மாதாந்திர போட்டிகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 24.08.2016 அன்று காலை 8.00 மணிக்கு விளையாட்டரங்கத்திற்கு வந்து, புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களிடம் தங்களது பெயரினை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**